

புதுதில்லியில், நேற்று (22.05.2025) காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 40 வது கூட்டம், காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், காவேரி தொழில்நுட்பக் குழு தலைவர் ஆர். சுப்பிரமணியம், உறுப்பினர் எல்.பட்டாபி ராமன், காவிரி தொழில்நுட்பக் குழு உதவி செயற்பொறியாளர் கொளஞ்சிநாதன், உதவி பொறியாளர் திருமதி நிஷா ஆகியோர் நேரிலும், கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய பிற மாநிலங்களில் இருந்து உறுப்பினர்கள் நேரடியாகவும் மற்றும் காணொளி வாயிலாகவும் கலந்து கொண்டனர்.

### உச்சநீதிமன்ற ஆணைப்படி

# 40.43 டி.எம்.சி. தண்ணீர் வழங்கிட வேண்டும்!

## காவிரி மேலாண்மை ஆணையத்திடம் தமிழ்நாடு அரசு வலியுறுத்தல்!

புதுடெல்லி, மே 23 - 22.05.2025 அன்று நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 40வது கூட்டத்தில், தமிழ் நாடு உறுப்பினர் மற்றும் அரசு செயலாளர், நீ.வ.து. தற்பொழுது (22.05.2025) மேட்டூர் அணையின் நீர்மட்டம் 110.74 அடியாகவும், நீர் இருப்பு 79.508 டி.எம்.சியாக உள்ளது என்றும் வரும் ஆண்டில் (2025-2026) தென்மேற்கு பருவ மழை, 2025, மே மாதம் 27ம் நாள் துவங்கும் எனவும், இப்பருவமழை இயல்பைவிட சற்று அதிகமாக இருக்கும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளதாலும், வரும் ஆண்டில் தமிழகத்திற்கு ஜூன் மற்றும் ஜூலை மாதத்தில் வழங்கப்பட வேண்டிய நீர் அளவான முறையே 9.19 டி.எம்.சி மற்றும் 31.24 டி.எம்.சி. நீரினை உச்சநீதி மன்ற ஆணையின் படி கர்நாடக மாநிலம் பில்லி குண்டுலுவில் உறுதி செய்யுமாறு ஆணையத்தை தமிழ்நாடு அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

### அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்

சென்னை, மே 23 - சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நேற்று (22.05.2025) பல்வேறு புதிய திட்டப் பணிகளை மேம்படுத்தும் விதமாக காஞ்சிபுரம் மாவட்டம், கோவூரில் உள்ள 1.42 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோயில் குளத்தை மேம்படுத்துவதற்காக ரூ.4.98 கோடி மதிப்பீட்டிலும், ஐயப்பந்தாங்கல் பேருந்து நிலையத்தை மேம்படுத்துவதற்காக ரூ.18.93 கோடி மதிப்பீ ட்டிலும் மற்றும் சென்னை, ஆதம்பாக்கம், பாலகிருஷ்ணா தெருவில் புதிய பல்நோக்கு மையம் அமைப்பதற்காக ரூ.9.91 கோடி மதிப்பீட்டிலும் பல்வேறு புதிய பணிகளுக்கான பூமி பூஜையை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி.கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சார் ஆட்சியர் மிருணாளினி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை மனோகரன், சி.எம்.டி.ஏ தலைமை திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் மா.பாலமுருகன், குன்றத்தூர் வடக்கு பகுதி ஒன்றிய செயலாளர் வந்தே மாதரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் அன்பழகன், கோவூர் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், துணைத் தலைவர் திருமதி. ஜமுனா ராணி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி.பூங்கொடி ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! படப்பை ஆ.மனோகரன் வரவேற்புரை!

# திருப்பெரும்புதூரில் பாக முகவர்கள் கூட்டம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரையாற்றுகின்றார்!

காஞ்சிபுரம், மே 23 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (24.5.2025 - சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு தில்லை மஹால் திருமண மண்டபம், படப்பையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் - மாவட்டக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், குறு -சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர், ஒன்றிய குழுத் பெருந்தலைவர் எஸ்.டி.கருணாநிதி, திருபெரும் புதூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ந. கோபால், மாங்காடு நகரச் செயலாளர், நகர மன்ற துணை தலைவர் பட்டூர்.எஸ். ஜபருல்லா, குன்றத்தூர் நகர செயலாளர், நகர மன்ற தலைவர் கோ.சத்திய மூர்த்தி, திருப்பெரும்புதூர் பேரூர் செயலாளர், நகர மன்ற தலைவர் இரா.சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர், கழக மக்களவை குழு தலைவர், திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பு.கஜேந்திரன், திருப்பெரும்புதூர் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் ஒன்றிய குழுத் பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய_நகர- பேரூர் கழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள்(BLA 2), உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக அணிகளின் மாவட்ட-ஒன்றிய- நகர- பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பார்கள், திருபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 10 பூத் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட உள்ளனர்.

குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் மணி நன்றியுரை ஆற்றுகிறார்.

### பெரம்பூர் முத்தமிழ் நகரில் வசிக்கும் வரலட்சுமிக்கு

# நடைபாதை வியாபாரம் செய்ய புதிய தள்ளுவண்டி - நிதி உதவி!

### மாவட்டப் பிரதிநிதி ஐ.சையத் அலிகான் வழங்கினார்!

சென்னை, மே. 23 - பெரம்பூர் வடக்கு பகுதி, 35 வது வட்டம், 1 வது பிளாக், 5 வது தெரு, முத்தமிழ் நகரில் வசிக்கும் வரலட்சுமி நடைபாதை வியாபாரம் செய்வதற்காக புதிய தள்ளுவண்டி மற்றும் வியாபாரம் செய்வதற்கு நிதி உதவியை மாவட்டப் பிரதிநிதி ஐ.சையத் அலிகான் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

அதுபோது ஏ.ஷேக் அப்துல்லா, ஏ.இக்பால், ஏ.சாதிக், எச்.நசீர் அகமத், எம்.பர்வீன் வேகம், எம்.முபினா பேகம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.




விருதுநகர் வடக்கு மாவட்ட கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவில் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, நகர, மாநகர, பகுதி மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் பா.செல்லதுரை தலைமையில் ஒன்றியச் செயலாளர்கள் பொன்னுதம்பி, சந்தனப்பாண்டி, இரமேஷ், கண்ணன், ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுச் செயலாளர் டாக்டர் சுபேர்கான் சிறப்புரையாற்றினார். உடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரவு மாநில துணைச் செயலாளர் அன்வர் அலி, முகமது மதார் மறையக்காயர், சாதிக் அலி, முகமது அலி ஜின்னா, முகமது முஸ்தப்பா, நாகூர் கனி, சிக்கந்தர் சேட், ரியாஸ் தீன் மற்றும் கழக பங்கேற்றனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களுக்கு 3 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**23/05/2025 வெள்ளிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மாலை 6.00 மணி | பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு மாலை அணிவித்தல் | ஒத்தக்கடை, திருச்சி. |
| மாலை 6.30 மணி | டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழா | புதுக்கோட்டை – பட்டுக்கோட்டை சாலை, கந்தர்வக்கோட்டை. |
| இரவு 7.30 மணி | மாநில அளவிலான கபடிப் போட்டியைத் தொடங்கி வைத்தல் | மங்களாக்கோவில், கந்தர்வக்கோட்டை. |

**24/05/2025 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | அரசு திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| காலை 11:30 மணி | வீட்டுமனைப் பட்டா மற்றும் 'கலைஞர் கனவு இல்லம்' திட்ட அரசாணை வழங்குதல் | ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை. |
| மதியம் 12:30 மணி | புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு. |
| மாலை 04:00 மணி | 'மிசா' துரை மாணிக்கம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி | ஏ.என்.எஸ்.பிரைட் ஹோட்டல் மினி ஹால், புதுக்கோட்டை. |
| மாலை 04:30 மணி | மகளிர் சுய உதவிக் குழுவினருடன் சந்திப்பு | 9-ஏ, நத்தம் பண்ணை, புதுக்கோட்டை. |
| மாலை 05:30 மணி | கழக மருத்துவ அணி மாநில கருத்தரங்கம் | பள்ளத்துவயல், திருச்சி பைபாஸ் சாலை, புதுக்கோட்டை. |
| மாலை 06:30 மணி | திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | கல்லுக்குழியல்பட்டி, இளையாவயல், புதுக்கோட்டை. |

**25/05/2025 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 09:30 மணி | கழக இளைஞர் அணி மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | கோர்ட் யார்டு ஹோட்டல், திருச்சி. |
| மதியம் 12:30 மணி | ஆர்.சிவராம் பிரசாத் – ஏ.காவ்யா இணையரின் திருமண வரவேற்பு விழா | ஸ்ரீ காமாட்சி மஹால், வேலாயுதம்பாளையம், கரூர். |

தி.மு.க. இளைஞர் அணி

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18

நாள் : 21-05-2025

